**தலைப்பு 207 – தொல்பொருளியல் திணைக்களம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 207 – தொல்பொருளியல் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1)ஆம் பிரிவின் பிரகாரம் தொல்பொருளியல் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 09 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2)ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 09 ஆந் திகதி வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் தொல்பொருளியல் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் நான் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) கடந்த வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| கடந்த வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்களின் பந்திக்கான தொடர்பு | நடைமுறைப்படுத்தப்படாத கணக்காய்வு அவதானிப்பு பரிந்துரை | இந்த அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|
| 1.6.1 (ஆ) | சொத்துக்களின் உரித்து திணைக்களத்திற்கு கையகப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 3.8 (ஐ) |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள

### 1.6.1 கணக்கீட்டு குறைப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | பண்டாரவலை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட M 4251 இலக்கமுடைய வழக்கின் மூலம் தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் உட்பட 04 பேரை பிரதிவாதிகலாக்கி அவர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் தலா ரூபா 7 கோடி நட்டயீடொன்று கோரப்பட்டு 2016 ஆம் ஆண்டில் பண்டாரவலை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட M 4251 | தொல்பொருள் திணைக்களத்தின் அதிகாரிகள் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டு சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் நட்டஈடு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. தற்போது அவதானிக்கப்பட்டுள்ள விடயங்களின் பிரகாரம், இவ்வாறான வழக்குகள கடந்த காலங்களில் தாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை என்பதுடன், அதன் | இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன் பிரகாரம், நிதிக் கூற்றுக்ளுக்கான குறிப்புகள் ஊடாக நிகழத்தக்க பொறுப்புகள் வெளிப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இலக்கமுடைய வழக்கு நடவடிக்கைகளுக்குரிய திணைக்களத்திற்கான நிகழத்தக்க பொறுப்புக்கள் தொடர்பாக தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | காரணமாகஇது தொடர்பில் சட்ட உத்தியோகத்தர்களுக்கு அனுபவம் இல்லை எனவும், இதன் காரணமாக நிகழத்தக்க பொறுப்புகள் தொடர்பாக கணக்குப் பிரிவிற்கு தெரிவிக்க முடியவில்லை எனவும் சட்ட பிரிவினால் எனக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இவ்வாறான முறைகளில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டால் அது தொடர்பில் கணக்குப் பிரிவிற்கு தெரிவிக்க எதிர்பார்க்கப்படுவதாக சட்ட அதிகாரியினால் என்னிடம் அறிக்கை விடுத்துள்ளார். | |
| (ii) | மாத்தறை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட M 13703ஆம் இலக்க வழக்கின் மூலம் தொல்பொருள் திணைக்களத்தின் நில அளவை உத்தியோகத்தர் ஒருவர், இரண்டு ஆய்வு உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக பெயர் குறிப்பிடப்பட்டு, ஒருவரிடமிருந்து தலா ரூபா 10 இலட்சம் நட்டஈடு கோரப்பட்டிருந்தது. 07 வருடங்களாக இடம்பெற்று வரும் இந்த வழக்கு தொடர்பில் திணைக்களத்தல் காணப்படுகின்ற நிகழத்தக்க பொறுப்புக்கள் தொடர்பாக தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | தொல்பொருள் திணைக்களத்தின் அதிகாரிகள் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டு சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் நட்டஈடு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. தற்போது அவதானிக்கப்பட்டுள்ள விடயங்களின் பிரகாரம், இவ்வாறான வழக்குகள கடந்த காலங்களில் தாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை என்பதுடன், அதன் காரணமாகஇது தொடர்பில் சட்ட உத்தியோகத்தர்களுக்கு அனுபவம் இல்லை எனவும், இதன் காரணமாக நிகழத்தக்க பொறுப்புகள் தொடர்பாக கணக்குப் பிரிவிற்கு தெரிவிக்க முடியவில்லை எனவும் சட்ட பிரிவினால் எனக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இவ்வாறான முறைகளில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டால் அது தொடர்பில் கணக்குப் பிரிவிற்கு தெரிவிக்க எதிர்பார்க்கப்படுவதாக சட்ட அதிகாரியினால் என்னிடம் அறிக்கை விடுத்துள்ளார். | இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன் பிரகாரம், நிதிக் நிதிககூற்றுக்ளுக்கான குறிப்புகள் ஊடாக நிகழத்தக்க பொறுப்புகள் வெளிப்படுத்த வேண்டும். |

### 1.6.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2022 திசெம்பர் 31 இல் அரச உத்தியோகத்தர்களின் முற்பண ‘‘பீ’’ கணக்கின் தனிப்பட்ட மீதிகள் வகைப்படுத்தல் பொழிப்பின் மீதி கூட்டுத்தொகை ரூபா 110,677,158 ஆக காணப்பட்டதுடன், கடன் கட்டுப்பாட்டு கணக்கின் மீதி ரூபா 111,084,342 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் அம்மீதிகளுக்கிடையில் ரூபா 407,184 ஆன வேறுபாடொண்டு இப்போதும் அவதானிக்கப்பட்டது. | சுரி. நிதிப் பிரிவின் உத்தியோகத்தகளின் பற்றாக்குறையால் பல விடயங்கள் ஒரு அதிகாரிக்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்தது. மேலும், தற்போதுள்ள நிதி அமைப்புகளை முறைப்படுத்துவதற்கான செயல்முறைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், கடந்த கால தவறுகளைத் தேடுவது மிகவும் கடினமாக உள்ளது. இருப்பினும், வேறுபாடு தேடப்பட்டு வருகிறது. | தனிப்பட்ட மீதிகள் பதிவேடு மற்றும் கடன் கட்டுப்பாட்டு கணக்குகளுக்கு இடையே காணப்படுகின்ற இந்த வேறுபாடு அடையாளப்படுத்தப்பட்டு தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வெவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 07 செலவின விடயங்கள் தொடர்பாக, 60 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சினுள் ரூபா 12,211,683 ஆன ஒதுக்கீடு சேமிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ளபடி மதிப்பீட்டின் மிகை மதிப்பீடு எதுவும் இடம்பெறவில்லை என்பதுடன், கீழே உள்ள அட்டவணையின் கடைசி பகுதியில் காட்டப்பட்டுள்ள காரணங்களால், ஒதுக்கீட்டைச் செலவழிக்க இயலாமையால் ஒதுக்கீடு சேமிப்பாக உள்ளதாக தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | மதிப்பீடுகள் தயாரித்தல் நடவடிக்கைகள் உரிய கவனத்துடன் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் கணினி மயமாக்கப்பட்ட பேரேட்டில் காணப்படுகின்ற Ambassador Fund for Cultural Preservation என்ற பெயரிடப்பட்ட பேரேட்டு கணக்கின் கீழ் கூட்டு மொத்தம் ரூபா 7,125,443 வும், Rajagala | பொது வைப்புக் கணக்கினுள் **2014** ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்பட்ட தொகையான ரூபா **5,076,893** இந்த ஆண்டு செலவிடப்பட உள்ளது. | பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பணத்தை உரிய பணிகளை முடிவுருத்துவதற்கு பயன்படுத்தப்பட வேண்டும். |

Archaeological Reserve – FHSS என்ற பெயரிடப்பட்ட பேரேட்டு கணக்கின் கீழ் கூட்டு மொத்தம் ரூபா 4,971,012 வும் மற்றும் தொல்பொருள் திணைக்களத்தின் பொது வைப்பு கணக்கினுள் 2014 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்பட்ட கூட்டு மொத்தம் ரூபா 5,076,893 வும், செயற்திட்டப் பணிகளுக்காக பயன்படுத்தப்படாமல், 2022 டிசம்பர் 31 வரை குறை பயன்பாட்டுக் கணக்குகளினுள் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது.

**2.2** பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தபால் திணைக்களத்திற்கு சொந்தமான 03 லொறிகள் 2020 ஜுன் 23 ஆம் திகதி தொல்பொருளியல் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டதுடன், அந்த லொறிகள் தபால் திணைக்கள இயந்திர பொறியியலாளர் மேற்பார்வை மற்றும் சிபாரிசுக்கு அமைய உள்நாட்டு முகவர் நிறுவனத்தினால் விலை மதிப்பீடுகள் கோரப்பட்டு ரூபா 4,614,777 க்கு பழுதுபார்ப்பு மேற்கொள்வது 2021 டிசம்பர் 31ஆம் திகதியில் முடிக்கப்பட்டிருந்தாலும், 2023 மார்ச் 15 வரையான கணக்காய்வு திகதி வரையும் உரிய சிட்டைகள் தீர்க்கப்பட்டு 03 வாகனங்களும் திணைக்களத்திற்கு பெற்றுக்கொள்வதற்கும் உரிய தொகை, செலுத்த வேண்டிய தொகையாக நிதிக் கூற்றுக்களில் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பான கூற்றினுள் உள்ளடக்கப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. | தவருதல் ஒன்றின் காரணத்தால், பொறுப்புக்கள் பதிவேட்டில் பதிவு செய்ய இயலவில்லையென்பதுடன் எதிர்காலத்தில் இது போன்ற தவறுகளை தவிர்க்கும் வகையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | வருடத்திற்குரிய அனைத்து பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளின் அளவுகள் தொடர்பான தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளினுள் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதாக. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 207-1-1-0-1301 மற்றும் 207-2-2-0-1301 வாகன பராமரிப்பு செலவு விடயத்தின் கீழ் முறையே செலவு செய்யப்பட்டுள்ள சிட்டைகளாக காணப்படுகின்ற ரூபா 2,856,215 மற்றும் ரூ.709,283 தொகைகள் நிதிப் பிரமானம் 94 (2) மற்றும் (3) பிரகாரம் வருகின்ற பொறுப்புக்களாக பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பான கூற்றினுள் வெளிப்படுத்தப்படவில்லை. | தவருதல் ஒன்றின் காரணத்தால், பொறுப்புக்கள் பதிவேட்டில் பதிவு செய்ய இயலவில்லையென்பதுடன் எதிர்காலத்தில் இது போன்ற தவறுகளை தவிர்க்கும் வகையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் கூற்றினுள் வருடத்திற்குரிய பொறுப்புக்கள் சரியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

## 2.3 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களம் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணிச் செய்யப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்வது அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் இடம் பெற வேண்டிய போதிலும் அம் மீளாய்வு எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டு தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு வருவதாகவும், எதிர்வரும் ஆண்டுகளுக்கான தேதிகளுக்கு ஏற்ப உரிய அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் எண் தேசிய தணிக்கைச் சட்டத்தின் பிரிவு 38 இன் விதிகளின்படி செயல்பட வேண்டும். |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(i)** இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவை | | | |
| • நிதிப் பிரமானம் 104 (3) | WPPG – 4006 கெப் வாகனத்தின் 2018 ஒக்டோபர் 09ஆம் திகதி இரவு 12:00 மணிக்கு இடம்பெற்ற திடீர் விபத்து தொடர்பான பொது படிவம் 283 இல் ஆரம்ப அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | கோப்பு பரீட்சித்தலின் போது அறிக்கை தயாரிக்கப்படாமல் இருப்பது கண்டறியப்பட்டது. இது 2018 ஆம் ஆண்டு நிகழ்ந்த விபத்தொன்று என்பதனால். கோப்பை பரீட்சித்தலின் பின்னர், இந்த விபத்து தொடர்பான நிதி பிரமானத்தின் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். | நிதிப் பிரமானத்தின் பிரகாரம் செயல்பட வேண்டும். |
| • நிதிப் பிரமானம் 104 (4) | WPPG – 4006 கெப் வாகனத்தின் 2018 ஒக்டோபர் 09ஆம் திகதி இரவு 12:00 மணிக்கு இடம்பெற்ற திடீர் விபத்து தொடர்பான பொது படிவம் 284 இல் பூரண அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | கோப்பு பரீட்சித்தலின் போது அறிக்கை தயாரிக்கப்படாமல் இருப்பது கண்டறியப்பட்டது. இது 2018 ஆம் ஆண்டு நிகழ்ந்த விபத்தொன்று என்பதனால். கோப்பை பரீட்சித்தலின் பின்னர், இந்த விபத்து தொடர்பான நிதி பிரமானத்தின் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். | நிதிப் பிரமானத்தின் பிரகாரம் செயல்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| **(ii)** | 2008 ஒக்டோபர் 20 ஆம் திகதிய 1572/4 இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் அதி விசேட வர்த்தமானி | அரச வர்த்தமானியின் பிரகாரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தேசியக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் பணி நிறைவேற்றப்படாததை அவதானிக்க முடிந்தது. | 2008 ஒக்டோபர் 20 ஆம் திகதிய 1572/4 இலக்க ஆவணம் மூலம் இலங்கையில் தேசிய தொல்பொருள் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான ஒரு கட்டமைப்பை விவரிக்கப்பட்டிருந்த போதிலும், இதுவரை அந்த கொள்கை திணைக்களத்திற்குள் நடைமுறைப்படுத்தப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2011 ஜனவரி 18, திகதிய அமைச்சரவை விஞ்ஞாபன இல. NH/05/2011 இன் ஊடாக தொல்பொருளியல் தளங்களின் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவத்திற்கான தொல்லியல் பாரம்பரிய முகாமை நம்பிக்கை நிதியத்தின் பெயரில் நிதியமொன்றை நிறுவுவதற்காக அமைச்சரவைக்கு விஞ்ஞாபனமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இதற்காக, 2011 பெப்ரவரி 10, திகதிய அமைச்சரவை பத்திரம் 11/0169/555/004 ஆம் இலக்கத்தின் மூலம் பெற்றுக்கொடுக்கப்பட்ட அங்கீகாரத்தின் பிரகாரம் மத்திய கலாச்சார நிதியத்தினால் ஈட்டப்படும் வருமானத்தில் நூற்றுக்கு 25 சதவீதத்தை விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்காக தேசிய பாரம்பரிய அமைச்சிக்கு வழங்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் மத்திய கலாசார நிதியத்திற்கு கிடைக்கபெறுகின்ற பணத்திலிருந்து | மத்திய கலாச்சார நிதியத்தினால் அமைச்சரவை தீர்மானித்தின் பிரகாரம் கிடைக்கப் பெற வேண்டிய பணம் கிடைக்காததால், திணைக்களத்தின் நில அளவை, அகழ்வுகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஒழுங்கான முறையில் மேற்கொள்ள முடியாமையின் காரணமாக பல தொல்பொருள் இடங்கள் கடும் அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுத்துள்ளன. | 2011 பெப்ரவரி 10ஆம் திகதிய 11/0169/555/004 ஆம் இல அமைச்சரவைப் பத்திரத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உரிய நிதியை ஸ்தாபிப்பதற்கு தேவையான ஒதுக்கீடுகள் கிடைக்காத காரணத்தினால் மேற்கொண்டு தொடர முடியாத நிலை காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது. | | |
| (ஆ) | அம்பாறை பிரதேச உதவி பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் இயங்கி வரும் நீலகிரி சேய புனரமைப்புப் பணிகள் தொடங்கப்பட்டு நீண்ட காலமாக காணப்படுவதுடன் கணக்காய்வு சந்தர்ப்பத்தின் போது, திணைக்களத்தின் நில அளவை பிரிவு அலுவலர்களினால் ஸ்தூபம் மற்றும் அதை அண்மித்த இடிபாட்டுத் தொகுதி அடையாளம் காணுமுகமாக நில அளவை பணி மேற்கொள்ளப்பட்டு நிறைவடைந்திருப்பதுடன் காப்பகமாக ஒதுக்குவதற்கான எல்லைகள் தீர்வு செய்யப்பட்டிருந்த போதும் எல்லை தூண்கள் நிறுவுதல் அல்லது அளவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தொல்பொருள் தளமொன்றாக அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருக்கவில்லை. | நீலகிரி ஸ்தூபம் மற்றும் அதனுடன் தொடர்புடைய இடிபாடுகளை அடையாளம் காணும் அகழ்வாராய்ச்சி பணிகள் நிறைவடைந்துள்ளன. அதன்படி கடந்த ஆண்டு அம்பாறை தொல்பொருளியல் அலுவலக அதிகாரிகளினால் நீலகிரி ஸ்தூபம் மற்றும் அதனுடன் தொடர்புடைய இடிபாடுகளை தொல்பொருளியல் காப்பகமாக ஒதுக்குவதற்காக எல்லைகள் தீர்வு செய்யப்பட்டிருந்தது. இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டால் அப்பகுதியை சுற்றிலும் எல்லைக் தூண்கள் நிறுவப்பட்ட பின்னர் அளவை பணியை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். | நீலகிரி ஸ்தூபம் மற்றும் அதை அண்மித்த இடிபாட்டு நிலப் பகுதியை தொல்லியல் காப்பகமாக அரச வர்த்தமானியில் வெளியிடப்பட கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (இ) | ரஜகல தொல்பொருள் தளத்திற்கு சொந்தமான 1025 ஏக்கர் நிலப்பரப்பில் பியங்கல காப்பகத்திற்கு உரிய பகுதியை அகற்றிய பின்னர், எஞ்சிய ரஜகல தொல்பொருள் செயற்திட்டத்திற்கு சொந்தமான நிலப் பகுதி தற்போது அளவீடு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு இருந்த போதிலும், 2023 மார்ச் 20, வரை எல்லை தூண்கள் நிறுவப்படாதிருந்த துடன் வேறுபடுத்தப்பட்ட தொல்லியல் தளமாக நில அளவைத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட கிராமம் வரைபடத்தில் குரிப்பிடப்பட்டிருந்த போதும் இந்த தொல்லியல் தளம் தொல்பொருள் காப்பகமாக அரச வர்த்தமானியில் வெளியிடப்படாதது அவதானிக்க முடிந்தது. | ரஜகல தொல்பொருள் காப்பகமாக பிரகடனப்படுத்தப்படாவிட்டாலும், அது வேறுபடுத்தப்பட்ட தொல்லியல் களமாக நில அளவைத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட கிராம வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். | ரஜகல தொல்பொருள் செயற்திட்டத்திற்கு சொந்தமான நிலப் பகுதியை தொல்பொருள் காப்பகமாக வர்த்தமானியில் பிரகடனம் செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கல்வெட்டு மற்றும் நாணயவியல் பிரிவின் மூலம் பிரதேச தொல்பொருளியல் அருங்காட்சியகத்தில் உள்ள பழங்கால நாணயங்கள் 10,950 ஆவணப்படுத்தப்பட்டு காணப்படுவதுடன் அதற்கான போதுமான ஒதுக்கீடுகள் இல்லாமை மற்றும் நீண்ட காலம் செலவிடப்படுவதன் காரணமாக தொல்பொருளியலில் பல்வேறு அகழ்வுகளின் போது கண்டெடுக்கப்பட்ட நகரக்கூடிய தொல்பொருட்களான பழங்கால நாணயங்கள் ஏராளமான அளவு தற்போதும் திணைக்களத்தின் பல்வேறு பிரிவுகளில் மற்றும் பிரதேச அலுவலகங்களில் பாதுகப்பு மற்றும் ஆவணப்படுத்தப்படாமல் களஞ்சியப்படுத்தப்பட்டிருப்பது | பழங்கால நாணயங்கள் 10,950 ஆவணப்படுத்தப்பட்டு காணப்படுவதுடன் தற்போதும் பாதுகப்பை மேற்கொள்வதற்காக அருங்காட்சியக பிரிவினுள் மற்றும் பிரதேச தொல்பொருள் அருங்காட்சியகத்தில் ஏராளமான அளவு நாணயங்கள் காணப்படுகிறது. | நகரக்கூடிய தொல்பொருட்கள் விரைவாக ஆவணப்படுத்துவதற்கும், அவை பாதுகாக்கப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | தொல்பொருளியல் திணைக்களத்தினால் பாஹியங்கல குகையில் மேற்கொண்ட அகழ்வுகளின் போது கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள் ஆராய்ச்சிக்காக கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திற்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் ஜெர்மனியில் உள்ள இலங்கை தூதரகத்தில் வைக்கப்பட்டு மீண்டும் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டு தொல்பொருள் திணைக்களத்திடம் 2022 பெப்ரவரி 11 அன்று ஒப்படைக்கப்பட்டதோடு மற்றும் அந்த எலும்புக்கூடுகளை பாதுகாப்பாக வைத்திருக்க மற்றும் பல்வேறு ஆய்வுகளை மேற்கொள்வதற்கு பொருத்தமான ஆய்வுகூட வசதிகள் தொல்பொருள் திணைக்களத்தில் இல்லாத காரணத்தினால் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக மருத்துவ பீடத்திடம் மேற்குறித்த திகதியில் கடிதம் மூலம் மீண்டும் | அவதானிப்புகளுடன் உடன்படுகின்றேன். | அகழ்வாராய்ச்சியில் கண்டெடுக்கப்படும் காணப்படும் மனித எலும்புகளின் எச்சங்களை உரியவாறு பாதுகாக்கப்பட வேண்டும் என்பதுடன், அதற்கான வசதிகள் செய்து தரப்பட வேண்டும். |

அதே தினத்தில் ஒப்படைக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

### 3.3 இழப்பு மற்றும் சேதம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| PG-4006 இலக்கம் கொண்ட கெப் வண்டி, 2018 ஒக்டோபர் 09 ஆம் திகதி நள்ளிரவு வேளையில் கண்டி கன்னோறுவ பிரதேசத்தில் விபத்துக்குள்ளானதில் வாகனத்திற்கு ஏற்பட்ட இழப்புக்கான நிதி மதிப்பீடு பெறுமதியான ரூபா 5,882,769 வை செலுத்துதல், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மறுத்ததன் காரணமாக, மேற்படி பெறுமதி அரச சொத்துக்கு சேதம் மற்றும் இழப்பு ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | PG-4006 இலக்கம் கொண்ட கெப் வண்டி, விபத்துக்குள்ளானதில் வாகனத்திற்கு ஏற்பட்ட இழப்பின் மதிப்பை செலுத்துதல், காப்புறுதிக் நிறுவனம் மறுத்ததன் காரணமாக, அந்தத் தொகையை அறவிடுவதற்கு சாரதிக்கு எதிராக சிவில் வழக்குத் தாக்கல் செய்வதற்காக தொல்பொருள் திணைக்களத்தின் சட்டப் பிரிவினால், சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு எழுத்து மூலம் அறிவித்ததுடன இது தொடர்பான மேலதிக பணிகள் நடைபெற்று வருவதாகவும் சட்டப் பிரிவினால் அறிவிக்கப்பட்டுள்ளது. | அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பை சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2004 மே 11, திகதியிட்ட 171/2004 இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம், சம்பளத்தை தயாரிப்பதற்காக சம்பள செயலாக்க மென்பொருளை (GPS – Government Payroll System) பயன்படுத்த வேண்டிய போதிலும், திணைக்களத்தின் யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் திருகோணமலை போன்ற பிராந்திய அலுவலக அதிகாரிகளின், சம்பளங்களை தயாரிப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை, GPS மென்பொருள் | உடன்படுகின்றேன். மனித வளத்தைப் பெற்ற பிறகு, கணக்காளரின் நேரடிக் கண்காணிப்பில் பணிபுரிய முடியும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். | சுற்றறிக்கை அறிவுரையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப் பட்டிருக்க வில்லை. மேலும், சம்பளத் தயாரிப்பு பணிகள் பிரதான கணக்காளரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் மையப்படுத்தப்பட்ட முறைப்படி மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதால் அதற்குத் தேவையான மனித வளம் போதுமானதாக இல்லை என்பதும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | மாகாண தொல்லியல் அலுவலகங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பிராந்திய அலுவலகங்களில் கடமையாற்றும் ஒட்டுமொத்த பதவியணியினரின் சம்பள உயர்வு வழங்குவது தொடர்பாக மேற்கொள்ளப்பட பரிசோதனையின் போது, 2015, 2018, 2019, 2020, 2021 ஆகிய வருடங்களுக்குரிய சம்பள உயர்வு வழங்கப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டது. | தடைத் தாண்டல் பரீட்சையில் சித்தி அடையாமை, ஏனைய அரச மொழித் தேவைகளை பூர்த்தி செய்யாமை, பரீட்சை பெறுபேற்றை உறுதிப்படுத்துவதற்கு அனுப்பப்பட்டுள்ள போதும், இதுவரை உறுதிப்படுத்தப்படாமை போன்ற காரணங்களினால் ஒரு சில சம்பள உயர்வுகள் வழங்கப்படாதிருந்ததுடன் ஏனைய அதிகாரிகளின் சம்பள உயர்வுகள் செலுத்தப்படடுள்ளது. | சரிபார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | தொல்பொருளியல் திணைக்களத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட திணைக்கள பதவிகளுக்கான இடமாற்ற முறைமையொன்று 2017 வரை தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், பொதுச் சேவை ஆணைக்குழுவின் முறைமைகளுக்கு இனங்க தயாரிக்கப்பட்ட வருடாந்த இடமாற்ற நடைமுறைக்கு 2018 ஜூலை 09 திகதி அனுமதி பெறப்பட்டிருந்தது. அவ்வாறு, வருடாந்த இடமாற்ற நடைமுறையொன்று அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும், அந்த முறையின்படி இடமாற்றம் மேற்கொள்வதற்காக அதிகாரிகள் மற்றும் பணியாளர்களைத் தெரிவு செய்வதற்கு இடமாற்ற மதிப்பீட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. மேலும், 2019, 2020, 2021 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளிலும் வருடாந்த இடமாற்ற நடைமுறையைச் செயல்படுத்துவதில் திணைக்களம் தவறியிருந்தது. | தொல்பொருளியல் திணைக்களத்தின் கடமையாற்றும் துறைசார் பதவிகளுக்காக பொதுச் சேவை ஆணைக்குழுவின் PSC/EST/02-04-08/01/2018 ஆம் இலக்க மற்றும் 2018 யூலை 09 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் 2018 யூலை 03 ஆம் திகதிய வருடாந்த இடமாற்ற நடைமுறையானது அங்கீகரிக்கப்பட்டு காணப்பட்ட போதிலும் 2020, 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் நாட்டில் நிலவிய மோசமான நிலைமை காரணமாக, திட்டமிட்டபடி இடமாற்றங்களை மேற்கொள்ள முடியாதிருந்தது. | வருடாந்த இடமாற்ற முறைமை திணைக்களத்தினுள் முறையாக நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | தொல்பொருளியல் திணைக்களத்தின் கீழ் கட்டுப்படுத்தப்பட்டு மற்றும் நிர்வகிக்கப்பட்டு வருகின்ற 13 சுற்றுலா இல்லங்களுக்கு அறவிடப்படும் கட்டணம் தொடர்பாக தீர்மானிக்கும் போது, கட்டுப்பாட்டு பிரிவு, கணக்கு பிரிவு மற்றும் பராமரிப்பு பிரிவு ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் குழுவொன்றை நியமித்து, அந்த குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் கட்டணங்கள் திருத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படாமல் பராமரிப்புப் பிரிவின் முடிவின் அடிப்படையில் மாத்திரம் கட்டணங்கள் திருத்தப்பட்டிருந்தன. | உடன்படுகின்றேன். எதிர்காலத்தில் முறையான குழுவொன்றை நியமித்து கட்டணத்தை திருத்தியமைக்க நடவடிக்கை எடுப்பதற்காக குறித்துக்கொண்டதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | நியமிக்கப்பட்ட குழுவின் முடிவின்படி சுற்றுலா இல்லங்களின் கட்டணம் நிர்ணயிக்கப்பட வேண்டும். |
| (உ) | மட்டக்களப்பு மாவட்டத்தில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 03 தொல்பொருளியல் இடங்கள் மற்றும் வர்த்தமானியில் வெளியிடப்படாத 122 தொல்பொருளியல் இடங்கள் உட்பட 125 தொல்பொருளியல் இடங்களுக்கான 125 தொல்பொருள் சாலை அடையாள பெயர் பலகை தயாரிப்பதற்காக 2020 யூலை 17 திகதியில் விநியோகத்தர்களுக்கு ரூபா 1,806,250 செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், 2023 ஏப்ரல் 28 ஆம் திகதி வரையிலும் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 03 இடங்களுக்கு மாத்திரம் பலகைகள் பொருத்தப்பட்டிருந்தமையும், எஞ்சிய 122 பலகைகள் நடுவதற்குத் தேவையான அனுமதிகள் பெறப்பட்ட போதிலும், போதிய ஏற்பாடுகள் இல்லாத காரணத்தினால் பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | மட்டக்களப்பு மாவட்டத்தில் 125 தொல்பொருளியல் இடங்களுக்கு பலகைகள் செய்யப்பட்ட போதிலும், முன்னாள் தொல்லியல் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தொல்பொருளியல் இடங்களுக்கு மாத்திரமே ஆகும். அதன்படி, வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தொல்பொருளியல் தளங்கள் 03 காணப்பட்டதுடன், அதற்காக 03 பலகைகள் நடப்பட்டதுடன், மீதமுள்ள 122 பலகைகளை நடுவதற்கு நான் ஒப்புதல் அளித்துள்ளேன். ஆனால், தற்போது திணைக்களத்திற்கு போதிய வசதி இல்லாததால், இப்பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. | துயாரிக்கப்பட்ட தொல்பொருளியல் சாலை அடையாள பெயர் பலகைகள் விரைவில் நிறுவப்பட வேண்டும். |
| (ஊ) | 2017/2018 ஆம் ஆண்டுகளில் கிழக்கு மாகாண விசேட அதிரடிப் படையென்ற படையொன்று நியமிக்கப்பட்டு திணைக்களத்தின் அனுசரணையுடன் கிழக்கில் உள்ள அனைத்து தொல்பொருள் இடங்களையும் இனங்கண்டு அந்த இடங்களைப் வேறுபடுத்தி | 2017-2018 ஆண்டுகளில் கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து தொல்பொருள் இடங்களையும் கண்டறிந்து, அந்த இடங்களை தனித்தனியாக பிரித்து அடையாளம் காணும் வகையில் எல்லைக் | கிழக்கு மாகாணத்தில் அடையாளம் காணப்பட்ட தொல்பொருள் இடங்கள் அனைத்திலும் உள்ள |

| | | | |
|---|---|---|---|
| | இனங்காணுவதற்காக எல்லைக் கம்பங்கள் அமைக்கும் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அந்த செயற்திட்டத்திற்காக 2018 ஆம் ஆண்டில், MNT/EP/49/18 மதிப்பீட்டின் கீழ் ரூபா 7,306,933 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், 2021 ஆம் ஆண்டில், விநியோகத்தருக்கு ரூபா 2,626,796 செலுத்தப்பட்டு 3 அடி மற்றும் 3½ அடி எல்லைக் கம்பங்கள் 1,531 தயாரிக்கப்பட்ட போதிலும் 2023 மார்ச் 20 கணக்காய்வு திகதி வரையிலும் குறித்த தொல்பொருளியல் இடங்களுக்கு எல்லைக் கம்பங்களை நிறுவுவதற்கு திணைக்களம் தவறியிருந்ததை அவதானிக்க முடிந்தது. | கம்பங்களை நிறுவும் செயற்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், அந்தசெயற்திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டு ரூபா 7,306,933 மதிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் ஒதிக்கப்பட்டு திணைக்களத்தின் அனுசரணையுடன் எல்லைக் கம்பங்கள் அமைக்கப்பட்டு காணப்பட்ட போதிலும் 2020, 2021 கோவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும் அதிரடிப் படையணியின் செயலற்ற தன்மை காரணமாக, எதிர்ப்பார்க்கப்பட்டதை போன்று பணிகளை மேற்கொள்ள முடியவில்லை. | தொல்பொருட்களை பாதுகாப்பதற்கு எல்லைக் கம்பங்களை அமைப்பது அத்தியவசியமான நடவடிக்கையாகும். |
| (எ) | திகவாபி சைத்தியை பாதுகாப்பதற்காக 2013-2014 ஆம் ஆண்டுகளில் தொல்பொருளியல் திணைக்களத்தினால் பெறப்பட்ட 377,000 பொறியியல் செங்கற்கள் முறையான தொழில்நுட்ப அறிக்கைகள் இன்றி கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக இலஞ்சம் அல்லது ஊழல்கள் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் விசாரணையொன்று நடாத்துவது மற்றும் அது தெபடர்பான இறுதி தீர்வொன்றை வழங்காமையின் காரணமாக 10 ஆண்டுகளுக்கு மேலாக காலநிலை மாற்றங்களுக்கு உள்ளாகி பெரிய செங்கற்கள் பல குவியல்களாக பிரிக்கப்பட்டு, சைத்தியை சுற்றியுள்ள சலபதல மலுவை மற்றும் மணல் மலுவை அண்மித்த பதுதியில் குவிந்து கிடப்பதை பௌதிக பரிசோதனையின் போது, அவதானிக்க முடிந்தது. | இந்த செங்கற்களை கொள்வனவு செய்தமை தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் விசாரணையொன்று இடம்பெற்றதன் காரணமாக களத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக இறுதி தீர்வொன்று அந்த ஆணைக்குழுவினால் இதுவரை பெற்றுக்கொடுக்காதிருந்த துடன் அந்த செங்கற்களை கொள்வனவு செய்தமை காரணமாக ஏற்பட்ட நட்டத்தை இழிவாக்கிக் கொள்வதற்கு அவற்றை சைத்தியை நிர்மானிப்பது தவிர வேறு தேவைகளுக்கு பயன்படுத்த அனுமதி கோரப்பட்டது. இது தொடர்பாக தேவையான தொழில்நுட்ப அறிக்கை 27.10.2022 அன்று இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. இது தொடர்பாக பலமுறை தொடர்பு கொண்டு தொலைபேசியில் வினவியபோதும் எந்த பதிலும் கிடைக்கவில்லை என மேலதிக பணிப்பாளர் நாயகம் (கல்வித்துறை) என்னிடம் | பிரச்னைக்கு உடனடியாக தீர்வு காண தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | புகார் அளித்துள்ளார். விரைவில் பிரச்சினையை தீர்க்க தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு குறித்துக்கொண்டதாக தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | |
| (ஏ) | தீகவாபி தாகபவையின் புனரமைப்பு பணிக்கான Rotatable arched template ஒன்று தயாரிப்பதற்காக தொல்பொருளியல் திணைக்களம் மற்றும் அரச தொழிற்சாலைகள் திணைக்களத்திற்கும் இடையில் 2019 நவம்பர் 25 திகதி ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்ததுடன், இந்த பணிக்கான ஒப்பந்த மதிப்பு வெட் தவிர்ந்த ரூபா 4,147,400 ஆகும். பணியைத் தொடங்குவதற்கு வேலைக்கான முன்பணமாக 50 சதவீதத்திற்கும் அதிகமான ரூபா 2,239,596 தொகையொன்று 2020 ஆகஸ்ட் 25 திகதி காசோலை எண் 428281 மூலம் பணிப்பாளர் நாயகம் அரச தொழிற்சாலைக்கு செலுத்தப்பட்ட போதிலும், பின்னர் பணியை பாதுகாப்பு அமைச்சின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டதன் காரணமாக அது அளவை உபகரணத்தின் மூலம் அளவை பெற்றுக்கொள்ளும் முறைமைக்கு அமைய மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. முன்பணம் செலுத்தப்பட்டு, மற்றும் குறிப்பிட்ட அளவு இரும்பு தயார் செய்யப்பட்டதால், சைத்தியை நிர்மானித்ததன் பின்னர் தேவையான பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக பயன்படுத்தக்கூடிய, கலற்றி நீக்கக்கூடிய, படிகளை நிறைவேற்றுவதற்காக அந்த உலோகப் பாகங்களைப் பயன்படுத்த முன்மொழியப்பட்டது. | Rotatable arched template தயாரிப்பதற்கு 2019 ஆம் ஆண்டளவில், அரசாங்க தொழிற்சாலையுடன் ஒரு ஒப்பந்தம் காணப்பட்ட போதிலும் பின்னர், அளவீடுகள் மூலம் அளவெடுக்கும் முறையின் கீழ் சைத்தியை புனரமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டதுடன் Rotatable arched template தயாரிப்பதற்கு தேவையில்லையென்பதனால் அதற்காக செலுத்தப்பட்ட முற்பணம் மற்றும் இரும்பு அச்சை தயாரிப்பதற்கு துண்டாக்கியிருந்த இரும்பைப் பயன்படுத்தி திகவாபி சைத்யாவின் பராமரிப்புக்காக தேவையான கலற்றி அகற்ற முடியுமான படிகளை தயாரிப்பதற்கு முன்மொழியப்பட்டது. | பிரச்னைக்கு உடனடியாக தீர்வு காண தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் மற்றும் பணத்தை திறமையாக பயன்படுத்த வேண்டும் |
| (ஐ) | திணைக்களத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள சொத்தின் உரிமையை கையகப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அந்த பணிகள் நிறைவு செய்யப்படாமலும் தலைமை அலுவலகத்தின் நிலத்தை கையகப்படுத்தும் நடவடிக்கைகள் கணக்காய்வு திகதி வரை | சொத்து கையகப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன் | தலைமை அலுவலகம் அமைந்துள்ள சொத்தை கையகப்படுத்தும் பணிகளை முடிக்க விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறைவடையாததை அவதானிக்க முடிந்தது. | | |
| (ஒ) | மரணம், ஓய்வுப் பெறுதல், பணி நீக்கம் மற்றும் சேவையை விட்டுச் செல்லுதல் போன்ற காரணங்களினால் திணைக்களத்தில் தற்போது சேவையில் இல்லாத ஊழியர்களிடமிருந்தும் மற்றும் உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கூட்டு மொத்தம் ரூபா 3,576,785 ஆன கடன் மீதியில் 05 ஆண்டுகளை மிகைத்த கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,329,920 ஆகும். அந் நிலுவை கடன் மீதிகளை அறவிடப்படுவதற்கு போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சிக்கல் சூழ்நிலைகள் தீர்க்கப்பட்டு, அறவீட்டு நடைமுறைகள் பின்பற்றப்படுவருகின்றன. | இந்த கடன் மீதி அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஓ) | 1998 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க தொல்பொருட்கள் (திருத்தம்) சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1940 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க தொல்பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் சில பிரிவுகளில் காலத்திற்கேற்ற திருத்தம் செய்யப்படாததன் விளைவாக, விதிக்கப்பட்ட அபராதம் போதுமானதாக இல்லை என்பது அவதானிக்கப்பட்டது. மேற்படி சட்டத்தின் பிரிவுகள், மீறுதல் தொடர்பாக மாவட்ட நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளில் கோவைப்படுத்தப்பட்டுள்ள குற்றப்பத்திரத்திற்கு குற்றமற்றவர்கள் என அறிவிக்கப்பட்டு வழக்கு விசாரணை முடிவடைந்ததன் பின்னர், குற்றஞ்சாட்டப்பட்டவர்.`.குற்றம் சாட்டப்பட்டவர்கள் உரிய குற்றங்களிலிருந்து குற்றமற்றவர்கள் என விடுவிக்கப்பட்ட பின்னர், நல்லெண்ணத்துடன் தங்கள் கடமைகளை ஆற்றிய அரசு அலுவலர்களுக்கு எதிரான இழப்பீடு கோரி வழக்குத் தொடரப்படுவதை தடுப்பதற்காக ஒதுக்கீடுகள் எதுவும் தொல்பொருட்கள் கட்டளைச் சட்டத்தில் இல்லாததால், சில சந்தர்ப்பங்களில் தொல்லியல் பணிப்பாளர் நாயகம் மற்றும் அந்த இடத்தைப் பார்வையிட சென்ற அதிகாரிகள் பிரதிவாதிகளாக ஆக்கப்பட்டு இழப்பீடு கோரி வழக்குத் தொடரப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது | இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள சிறப்புச் சட்டங்களில், இலஞ்சச் சட்டம், கணக்காய்வுச் சட்டம், வனவிலங்கு மற்றும் தாவரங்கள் கட்டளைச் சட்டங்கள் போன்ற சட்டங்களில் அரசாங்க அதிகாரிகளுக்கு எதிராக வழக்குத் தொடுக்குவதைத் (தடுப்பு) தடுக்கும் வகையில் ஷரத்துக்களைக் உள்ளடக்கப்பட்டு காணப்பட்ட போதிலும், 1998 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க தொல்பொருட்கள் (திருத்தம்) சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1940 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க தொல்பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் இத்தகைய சரத்துகள் சேர்க்கப்படாததால், நேர்மையாக கடமைகளைச் செய்யும் அரசு அதிகாரிகளுக்கு எதிராக வழக்குகள் தொடுக்கப்பட்டிருந்தன. | தொல்பொருட்கள் கட்டளைச் சட்டம் காலத்தின் தேவைக்கேற்ப திருத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டது. | | |
| (ஓள) | 1998 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க தொல்பொருட்கள் (திருத்தம்) சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1940 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க தொல்பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் 46(1) இன் பிரகாரம் நடைமுறைப்படுத்தும் தாமதங்கள் நிலவியதன் காரணமாக மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்பட்டதன் பின்னர், பிரதிவாதிக்கு விதிக்கப்படுகின்ற தண்டப்பணத்திலிருந்து பாதியை தொல்பொருட்கள் பரிசு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். தற்போது தயாரிக்கப்பட்டுள்ள மேற்குறித்த பெறுமானங்கள் உள்ளடக்கப்பட்டுள்ள வரைபுகளின் மூலம் சட்ட விடயங்களில் ஈடுபடும் சுற்றிவளைப்பு அதிகாரிகள், போலிஸ் அதிகாரிகள் அல்லது ஏனைய அரச நிறுவனங்கள் அல்லது உள்ளூராச்சி நிறுவனங்களின் சில அதிகாரிகளுக்கு,30 சதவீதத்தை பெற்றுக்கொடுப்பதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும் குறித்த பெறுமானங்கள் உள்ளடக்கப்பட்ட வரைபு தொல்பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் 47(3) இன் பிரகாரம், பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்து அங்கீகரம் பெறப்பட வேண்டிய போதிலும் அதன் தாமத்தின் காரணமாக விசேடமாக போலிஸ் அதிகாரிகள் கோருகின்ற பரிசு நிதிய சதவீதத்தை அவர்களுக்கு பெற்றுக்கொடுக்க முடியாது போயிருந்தது. | 2023 ஏப்ரல் 24 திகதியாகும் போது, தொல்பொருட்கள் திருடப்படுவது தொடர்பாக 07 வழக்குகளும், தொல்பொருட்களை அழித்தது தொடர்பான 06 வழக்குகளும், மற்றும் தொல்பொருட்களை சட்டவிரோத அகழ்வாய்வு தொடர்பாக 155 வழக்குகளும் ஆக மாற்றப்பட்டு காணப்படுகின்றது. | தேவையான சட்ட ஏற்பாடுகளைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க கவனம் செலுத்த வேண்டும் |

### 3.5 செயற்பாட்டு மீளாய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தில் பயன்படுத்தப்படும் வாகனங்கள் உடலில் அரச சின்னம் மற்றும் திணைக்களத்தின் பெயர் அச்சிடப்படவில்லை. | திணைக்களத்திற்குச் சொந்தமான வாகனங்களின் உடற்பகுதியில் அரச இலச்சினை மற்றும் திணைக்களத்தின் பெயர் அச்சிடுவதற்கான ஏற்பாடுகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். | உடனடியாக அரச சின்னம் மற்றும் திணைக்களத்தின் பெயரை வாகனங்களின் உடலில் பொறிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தொல்பொருளியல் திணைக்களத்திற்கும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திற்கும் இடையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் கீழ், இரண்டு நிறுவனங்களுக்கிடையில் ஒரு கூட்டுத் செயற்திட்டமாக 2012 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 323,897,373 ஆன ரஜகலதென்ன தொல்பொருள் செயற்திட்டமானது, 2022 டிசம்பர் 31 திகதியில் நிறைவடைந்திருந்தது. இச் செயற்திட்டத்தின் மூலம் கண்டறியப்பட்டுள்ள தொல்பொருள் நினைவுச்சின்னங்களை பார்வையிட உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாவை மேம்படுத்துவதற்கு தொடர்புடைய கட்டுப்பாட்டு நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டுவதற்கு மேலதிகமாக உத்தேசித்துள்ள கட்டுமானத்தை விரைவாக முடிக்க வேண்டிய அவசியம் உள்ளதுடன், அதற்கு காலதாமதம் ஏற்படுவதுடன், அத்துடன் சுற்றுலாத்துறையின் அபிவிருத்திக்கும் இது முக்கியமான சுற்றுலா தலமாக ரஜகலதென்னையை அமைப்பதற்காக தொல்பொருள் திணைக்களம், மத்திய கலாசார நிதியம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், வனஜீவராசிகள் திணைக்களம், தற்போது நாட்டில் நிலவும் கடுமையான நிதி நெருக்கடிக்கு வன பாதுகாப்பு திணைக்களமும் இலங்கை சுற்றுலா சபையும் ஒன்றிணைந்து நடவடிக்கையை மேற்கொள்ளும் முறைமையை தயாரித்து நடைமுறைப்படுத்துவதன் மூலம் நாட்டில் தற்போது நிலவும் மோசமான நிதி நெருக்கடிக்கு நிரி நிவாரணம் ஒன்றை அன்மித்து கொடுப்பதற்கு அரச துறையின் சில பங்களிப்புகளை வழங்க முடியும் என அவதானிக்கப்பட்டது. | அவதானிப்புகளுடன் உடன்படுகின்றேன். | துரிதமாக தேவையான நடவடிக்கைகளை எடுக்கப்பட வேண்டும். |

## 5. நல்லாளுகை

### 5.1 பொது மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2008 ஆம் ஆண்டு, மாத்தறை கம்புருகமுவ எத் கந்த ஆலயத்தை சுற்றி நடத்தப்பட்ட தொல்பொருள் அகழ்வாராய்ச்சியின் போது, ஆலயத்தை ஒட்டியுள்ள தனியார் காணியின் தொன்மைகளை பார்வையிடச் சென்ற தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் தலையீடு செய்ததாக, தனியார் காணியின் உரிமையாளர், மாத்தறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். இது தொடர்பாக மாத்தறை பொலிசாரால் நீதவான் நீதிமன்றில் வழக்கு இலக்கம் 90759 ஆன வழக்கொன்டு தாக்கல் செய்திருந்தது. வழக்கு விசாரணையின் பின்னர், குற்றம் சாட்டப்பட்டவர் குற்றமற்றவராக விடுவிக்கப்பட்டதுடன், பென் பிரதிவாதியினால் 08 மாத கால சிறைத்தண்டனை அனுபவித்ததன் காரணமாக தனக்கு ஏற்பட்ட இழப்புக்காக ஒரு நபரிடம் இருந்து தலா ரூபா 10 இலட்சம் நட்டஈடு கோரப்பட்டு தொல்பொருள் திணைக்களத்தின் ஒரு அகழ்வாராய்ச்சி அதிகாரி மற்றும் 02 தொல்பொருள் ஆராய்ச்சி அதிகாரிகளுக்கு எதிராக, மாத்தறை மாவட்ட நீதிமன்றத்தில் M13703 ஆம் இலக்க வழக்கு தாக்கல் செய்திருந்தது. | இந்த வழக்கில் தொல்பொருளியல் திணைக்களத்தின் மூன்று பேர் மற்றும் கிராம உத்தியோகத்தர் உட்பட 6 பேர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர். 6வது பிரதிவாதியாக சட்டமா அதிபர் பெயரிடப்பட்டுள்ளார். இந்த வழக்கில் நான் பிரதிவாதியாக குறிப்பிடப்படவில்லை. பிரதிவாதி ஒருவரிடம் இருந்து தலா ரூபா 10 இலட்சம் இழப்பீடு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தொல்பொருளியல் திணைக்களத்தினால் விடுக்கப்பட்ட விசேட கோரிக்கையின் பிரகாரம், இந்த வழக்கில் பிரதிவாதிகள் சார்பில் அரசாங்கத்தின் சிரேஷ்ட சட்டத்தரணி ஒருவர் ஆஜராகியுள்ளார். இந்த வழக்கு 2015 இல் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட சாட்சி அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளன. அடுத்த கட்டமாக பிரதிவாதிகளிடம் இருந்து சாட்சி பெற்றுக்கொள்வதே ஆகும். 2023.01.18 முதலாவது பிரதிவாதியிடமிருந்து சாட்சி விசாரிக்கப்பட்டது. மீண்டும், மேலதிக விசாரணைக்காக 2023. 06.20 திகதி பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதை தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். | திணைக்கள உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை நேர்மையாகச் செய்யும்போது பிரச்சினைகள் ஏற்படும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களின் பாதுகாப்பிற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | ஹப்புத்தளை பொலிஸ் பிரிவில் அமைந்துள்ள ஹல்துமுல்ல சொரகுனே கதிர்காம ஆலயம். அமைந்துள்ள இடத்தில் அனுமதியின்றி அகழ்வுகளை மேற்கொண்ட மூன்று பிரதிவாதிகளுக்கு எதிராக அப்புத்தளை பொலிஸாரால், பண்டாரவளை நீதவான் நீதிமன்றில் 2014 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டிருந்த 63402 ஆம் இலக்க | இது நான் உட்பட 4 பேரை பிரதிவாதிகளாகக் பெயர் குறிப்பிட்டு 2016ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும். ஒருவரிடம் தலா ரூபா 07 கோடி நட்டஈடு கோரப்பட்டிருந்தது. இந்த வழக்குக்காக சட்டமா அதிபர் | திணைக்கள உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை நேர்மையாகச் செய்யும்போது பிரச்சினைகள் ஏற்படும் பட்சத்தில் |

| | | | |
|---|---|---|---|
| | வழக்கை விசாரித்த பின்னர், 2014 ஆண்டு ஜூன் 03 ஆம் திகதி பிரதிவாதிகளை குற்றமற்றவர்கலாக விடுதலை செய்திருந்தனர். பின்னர், பிரதிவாதிகள் தாம் சிறைவாசத்தின் போது அனுபவித்த துன்புறுத்தல்களுக்கு இழப்பீடு கோரி பண்டாரவளை மாவட்ட நீதிமன்றில் M 4251 இலக்க வழக்கை தாக்கல் செய்திருந்தனர். இந்த வழக்கில் தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் இருவர், தொல்லியல் பணிப்பாளர் நாயகம், கிராம உத்தியோகத்தர் மற்றும் ஆலயத்தின் மதகுரு பிரதிவாதிகளாக பெயர் குறிப்பிடப்பட்டு ஒருவரிடம் தலா ரூபா 07 கோடி நட்டஈடு கோரப்பட்டிருந்தது. | திணைக்களத்தைச் சேர்ந்த சட்டத்தரணி ஒருவர் ஆஜராகியுள்ளதாகவும், அது இன்னும் விசாரிக்கப்பட்டு வருவதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். | சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் களின் பாதுகாப்பிற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | தொல்பொருளியல் சட்டம் மீறப்படுதல் தொடர்பாக தொல்பொருளியல் திருட்டு தொடர்பான 07 வழக்குகளும், தொல்பொருள் அழித்தல் தொடர்பான 03 வழக்குகளும், தொல்பொருள் சட்டவிரோத அகழ்வு தொடர்பான 152 வழக்குகளும், சட்டத்திற்கு உட்படுத்தப்படும் பிற குற்றங்கள் தொடர்பான 11 வழக்குகள் உட்பட 2022 டிசம்பர் 31இல் காணப்பட்ட ஒட்டு மொத்த வழக்குகள் 173 ஆகும். மேலும், கணக்காய்வு திகதியில் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகின்ற 72 வழக்குகள் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | 2023 ஏப்ரல் 24 திகதி உள்ளவாறு தொல்பொருளியல் திருடப்பட்டது தொடர்பாக 07 வழக்குகளும், தொல்பொருளியல் அழித்தது தொடர்பான 06 வழக்குகளும், மற்றும் தொல்பொருளியல் சட்டவிரோத அகழ்வு தொடர்பாக 155 வழக்குகளுமாக மாறுபட்டு காணப்பட்டது. | தொல்பொருளிய ல் திருட்டு, சேதம் மற்றும் அழிப்பதைத் தடுக்க உரிய நடவடிக்கைகள் பின்பற்றப்பட வேண்டியதுடன் அதில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டிருக் க வேண்டும். |

6. **மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 4318 உம், உள்ளவாரான பதவியணி 1882 உம் உள்ளமையினால் வெற்றிடங்கள் எண்ணிக்கை 2476 ஆக காணப்பட்டது. இந்த வெற்றிடங்களில், நிறைவேற்று மட்டத்தின் வெற்றிடங்கள் 39ம், மூன்றாம் மட்டத்தின் வெற்றிடங்கள் 34ம், இரண்டாம் மட்டத்தில் 202ம் முதலாம் மட்டத்தில் 2216மாக காணப்பட்டது. இந்த வெற்றிடங்களுக்காக பதிற்கடமை | 2022 டிசம்பர் 31 திகதியில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 4318 உம், உள்ளவாரான பதவியணி 1882 உம் உள்ளமையினால் வெற்றிடங்கள் எண்ணிக்கை 2476 ஆக காணப்பட்டது. இந்த வெற்றிடங்களில், நிறைவேற்று மட்டத்தின் வெற்றிடங்கள் 39ம், முதன்மை மட்டத்தின் வெற்றிடங்கள் 19ம், இரண்டாம் மட்டத்தில் 202ம், | ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் அமுலிலுள்ள சட்டங்கள் விதிகளுக்கமைய இந்த ஊழியர் வெற்றிடங்கள் தேவையின் அடிப்படையில் விரைவாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் கடமை மேவுகை அடிப்படையில் ஊழியர்கள் கடமையில் இணைக்கப்பட்டிருந்ததுடன், அந்த பதவிகளுக்காக நிரந்தரமாக ஆட்சேர்ப்பு மேற்கொள்ள முடியாத காரணத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மொத்த பதவியணியின் 57 சதவீத வெற்றிடங்கள் காணப்பட்டதோடு இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு தவரியிருந்தது. | முதன்மை மட்டத்தில் 2216மாக காணப்பட்டது. அதன்படி, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 57% வெற்றிடங்கள் காணப்பட்டமையால் உத்தேசிக்கப்பட்ட பணிகளைச் மேற்கொள்வதில் பல்வேறு தடைகள் ஏற்பட்டன. | |
| (ஆ) | தொல்பொருளியல் திணைக்களத்தின் இணை சேவைப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் குழுவினால் நிறைவேற்றுப் பணிப் பிரிவின் (ளுடு-1) ஆட்சேர்ப்பு நடைமுறைக்கான அடிப்படை உரிமைகளை மீறுவது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் ளுஊ (குசு) 248/2016 ஆம் இலக்க தாக்கல் செய்யப்பட்ட வழக்கு 2021 டிசம்பர் 08 திகதி நிறைவடைந்து இருந்த போதிலும், கணக்காய்வு சந்தர்ப்பம் வரை வழக்கின் தீர்ப்பு வெளியிடப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இருப்பினும், இது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களம் மேற்கொண்ட விசாரணை தொடர்பில், அந்த திணைக்களத்தினால் CCA286/2016 (A) இலக்க மற்றும் 2022 ஒக்டோபர் 13 ஆம் திகதியிட்ட கடிதத்தின் ஊடாகவும், அறிவிக்கப்பட்டிருந்ததுடன் உரிய ஆட்சேர்ப்பு முறைமைக்கு இணங்க ஆட்சேர்ப்பு மேற்கொள்ள வேண்டாம் என இடைக்கால உத்தரவும் அத்தோடு திணைக்களம் தற்போது அடைந்துள்ள பிரச்சினைக்குரிய சூழ்நிலையை சுட்டிக்காட்டி மேற்குறித்த வழக்கை பிரேரணையின் மூலம் மீண்டும் கோரிக்கை விடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோளொன்று பௌத்த, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் ஊடாக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு முன்வைத்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | தொல்பொருளியல் திணைக்களத்தின் இணை சேவை பிரிவின் அதிகாரிகள் குழுவினால் நிறைவேற்று சேவை பிரிவின் (ளுடு-1) உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகளை மீறுவது தொடர்பாக SC (FR) 248/2016 ஆம் இலக்க தாக்கல் செய்யப்பட்ட வழக்கு 2021.12.08 திகதி முடிவடைந்த போதிலும் இதுவரை முடிவு அறிவிக்கப்படவில்லை. இது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தில் மேற்கொண்ட விசாரணை தொடர்பில், அந்த திணைக்களத்தினால் அனுப்பப்பட்ட இலக்கம் CCA286/2016 (A) மற்றும் 13.10.2022 திகதிய கடிதத்தின் மூலமும், அது தொடர்பாக அறிவிக்கப்பட்டதுடன் உரிய ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு இணங்க ஆட்சேர்ப்பை மேற்கொள்ள வேண்டாம் என இடைக்கால உத்தரவின் மூலமும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | பிரச்னைக்கு தீர்வு காண உடனடியாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |